உலக புகழ் பெற்ற அலங்காநல்லூர் ஜல்லிக்கட்டை துவக்கி வைக்க வருகை தரும் கழகத் தலைவர் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களையும், பிரசித்தி பெற்ற பாலமேடு ஜல்லிக்கட்டு விழாவை துவக்கி வைக்க வருகை தரும் கழக இளைஞரணி செயலாளர் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்களுக்கும் சிறப்பான வரவேற்பு கொடுத்து விழாவினை சிறப்பிப்பது தொடர்பாக நடைபெற்ற மதுரை வடக்கு மாவட்ட திமுக பொது உறுப்பினர்கள் ஆலோசனை கூட்டத்தில் மாவட்ட செயலாளர் வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி சிறப்புரையாற்றினார். உடன் கழக நிர்வாகிகள் எம்.ஆர்.எம். பாலசுப்பிரமணியம், ஆ.வெங்கடேசன் எம் எல் ஏ, சோமசுந்தர பாண்டியன், தனச்செல்வம், வக்கீல் பாலாஜி, வடிவேல் முருகன், புதூர் சேகர், நேரு பாண்டியன், வக்கீல் கலாநிதி, மதுரை பாலா, சுப.த.சம்பத், ஆனந்த் உள்ளிட்ட திரளான கழக நிர்வாகிகள், கழகத்தினர் பங்கேற்றனர்.

உளுந்தூர்பேட்டை – கிழக்கு மருதூர் கிராமத்தில்

ஏரியில் மூழ்கி உயிரிழந்தவர் குடும்பத்திற்கு ரூ.3 லட்சம் நிதி உதவி!

முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவிப்பு!

சென்னை, ஜன.10

கள்ளக்குறிச்சி மாவட்டம், உளுந்தூர்பேட்டை வட்டம், கிழக்கு மருதூர் கிராமத்தில் உள்ள ஏரியில் மூழ்கி உயிரிழந்தவரின் குடும்பத்தினருக்கு ஆறுதல் மற்றும் நிதியுதவி - அறிவித்து முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அறிவிப்பு வெளியிட்டுள்ளார்.

இது குறித்து முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் அறிவிப்பு வருமாறு:-

கள்ளக்குறிச்சி மாவட்டம், உளுந்தூர்பேட்டை வட்டம், கிழக்கு மருதூர் கிராமத்தைச் சேர்ந்த சுரேஷ் (வயது 43) த/பெ.சன்னியாசி என்பவர் நேற்று (08.01.2026) மாலை 5.30 மணியளவில் எதிர்பாராதவிதமாக மேற்படி கிராம ஏரியில் மூழ்கி உயிரிழந்தார் என்ற துயர செய்தியைக் கேட்டு மிகுந்த வருத்தமும் வேதனையும் அடைந்தேன்.

மேலும், இச்சம்பவத்தில் உயிரிழந்தவரின் குடும்பத்தினருக்கும், அவரது உறவினர்களுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும், ஆறுதலையும் தெரிவித்துக் கொள்வதோடு, உயிரிழந்த சுரேஷ் அவர்களின் குடும்பத்தினருக்கு மூன்று இலட்சம் ரூபாய் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்கிடவும் உத்தரவிட்டுள்ளேன்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அறிவித்துள்ளார்.

எழும்பூர் சட்டமன்றத் தொகுதியில்

பொங்கல் விழா: 1200 பேருக்கு பொங்கல் தொகுப்பு!

இ.பரந்தாமன் எம்.எல்.ஏ. வழங்கினார்!

சென்னை, ஜன.10

கழகச் சட்டத்துறை இணைச் செயலாளரும் எழும்பூர் சட்டமன்ற உறுப்பினருமான வழக்கறிஞர் இ.பரந்தாமன் ஏற்பாட்டில் வார்டு எண்.61, எழும்பூர், ஆல்பர்ட் திரையரங்கம் அருகிலுள்ள பியாஸ் மஹாலில் பொங்கல் விழா நடைபெற்றது.

இவ்விழாவில் எழும்பூர் தொகுதிக்குட்பட்ட சென்னை மாநகராட்சி, குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீர் வடிகால் வாரியம், மின் வாரியம் மற்றும் தூய்மைப் பணியாளர்கள் உள்ளிட்ட 1,200 ஊழியர்களுக்கு பச்சரிசி, வெல்லம், நெய், ஏலக்காய், முந்திரி, திராட்சை, காலண்டர் மற்றும் புடவை, வேட்டி, சட்டை உள்ளிட்ட பொங்கல் பொருள் தொகுப்பைச் சட்டமன்ற உறுப்பினர் இ.பரந்தாமன் வழங்கினார்.

இந்நிகழ்வில் எழும்பூர் தெற்குப் பகுதி முன்னாள் செயலாளர் ஜெ.விஜயகுமார், முன்னாள் மாவட்டப் பிரதிநிதி புரசை எஸ்.குமார், அவைத் தலைவர் வெ.மருதன், மாவட்டப் பிரதிநிதிகள் மா.காந்தி, கமலக்கண்ணன்; 108வது வட்டத் துணைச் செயலாளர் கே.சீனிவாசன், 77 'அ' வட்டத் துணைச் செயலாளர் ஆர்.ஆரோக்கியம், அவைத் தலைவர் டி.விஸ்வநாதன், எழும்பூர் தெற்குப் பகுதி இளைஞர் அணி துணை அமைப்பாளர் ஜெ.சிலம்பரசன், 108 'அ' வட்ட இளைஞர் அணி அமைப்பாளர் பு.சதிஷ்குமார், எழும்பூர் வடக்குப் பகுதி மகளிர் தொண்டர் அணி துணை அமைப்பாளர் ஜெயலெட்சுமி, 99வது வட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர் தெ.திவாகரன், 99 'அ' வட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர் சு.குணா, 108வது வட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர் ஜோ.சந்தோஷ்குமார், 58 வது வட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர் வே.பா.ரோஹித்குமார், 58 'அ' வட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர் தி.ராஜ்குமார், 78வது வட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர் ஏ.வேலன்,

78 'அ' வட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர் எம்.இ.மகேஷ்குமார், தலைமைக் கழகப் பேச்சாளர் எம்.இ.தேவநிதி, முன்னாள் அவைத் தலைவர் கி.புஷ்பராஜ், பிரம்மதேவன், பாக முகவர் கவிதா, சரவணன், சிவக்குமார், சிம்பு, விஷால், அசினா பேகம், சத்யகலா உள்ளிட்ட கழக நிர்வாகிகளும் செயல்வீரர்களும் கலந்து கொண்டனர்.

இராயபுரம் சட்டமன்றத் தொகுதிக்கு உட்பட்ட நியாயவிலைக் கடைகளில், பொங்கல் பரிசுத் தொகுப்பு வழங்கும் நிகழ்வை ஐட்ரீம் மூர்த்தி எம்.எல்.ஏ. தொடங்கி வைத்து குடும்ப அட்டைதாரர்களுக்கு பொங்கல் பரிசுத் தொகுப்பு மற்றும் ரொக்கம் 3000 ரூபாய் வழங்கினார். இந்நிகழ்வில் பகுதி செயலாளர் செந்தில்குமார், பகுதி செயலாளர் வ.பெ.சுரேஷ், வட்டச் செயலாளர்கள் கலைச்செல்வன், காட்டன் ஜி.சதிஷ்குமார், ஆர்.வி.கணேஷ், என்.கிருஷ்ணன், கே.கோவிந்தராஜ், பி.கண்ணன், இரா.பாலன், எம்.எல்.ரவி, எஸ்.புகழேந்தி, கொரியர் பி.முருகன், பாலலட்சுமணன், ஜெ.கௌரீஸ்வரன் ஆகியோருடன் நியாயவிலைக் கடை உதவி ஆணையர் திருமதி. கற்பகவள்ளி, நியாயவிலைக் கடை பணியாளர்கள் மற்றும் மாவட்ட, பகுதி, வட்ட, கழக நிர்வாகிகள் உள்ளிட்டோர் உடனிருந்தனர்.

க.சுந்தர், எம்.எல்.ஏ., – க.செல்வம், எம்.பி. பங்கேற்பு! சி.வி.எம்.பி. எழிலரசன் எம்.எல்.ஏ. ஏற்பாட்டில்,

கல்வியில் சிறந்த தமிழ்நாடு - Kanchipuram Edition நிகழ்ச்சி!

அமைச்சர்கள் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் – ஆர்.காந்தி பரிசு வழங்குகின்றனர்!

காஞ்சிபுரம், ஜன.10-

தமிழ்நாடு அரசு முன்னெடுத்துள்ள "கல்வி சிறந்த தமிழ்நாடு" என்ற உன்னத இலக்கினை எய்தும் வகையில், திராவிட மாடல் ஆட்சியில் கல்வித் துறையில் வியக்கத்தக்கப் புரட்சியை ஏற்படுத்தி வரும் தமிழக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களது வழிகாட்டுதலிலும், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் மேலான வாழ்த்துக்களுடனும், காஞ்சிபுரத்தில் சாதனை படைத்த ஆசிரியர்கள் மற்றும் மாணவர்களுக்கு பாராட்டு மற்றும் விருதுகள் வழங்கும் விழா காஞ்சிபுரம் சட்டமன்ற உறுப்பினர் சி.வி.எம்.பி. எழிலரசன் அவர்களின் சீரிய ஏற்பாட்டில், இன்று (10-01-2026), காஞ்சிபுரம் மாநகரம், செவிலிமேட்டில் உள்ள எஸ்.வி.மஹாலில் நடைபெற உள்ளது.

காஞ்சிபுரம் தெற்கு மாவட்டக் கழகச் செயலாளர் க.சுந்தர், எம்.எல்.ஏ., தலைமையில் நடைபெறும் நிகழ்வில், காஞ்சிபுரம் நாடாளுமன்ற உறுப்பினர் க.செல்வம் முன்னிலை வகிக்க, அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர் செல்வம், அமைச்சர் ஆர். காந்தி பங்கேற்று, மாணவச் செல்வங்களுக்கு சான்றிதழ், விருது வழங்கி சிறப்புரையாற்ற உள்ளனர்.

"கல்வி கரையிலாத காஞ்சி" என்று போற்றப்படும் இந்நகரின் கல்விப் பெருமையை மீண்டும் பறைசாற்ற நமது திராவிட மாடல் ஆட்சியில் பல்வேறு நடவடிக்கைகளை காஞ்சிபுரம் சட்டமன்ற உறுப்பினர் சி.வி.எம்.பி. எழிலரசன் அவர்கள், "கல்வியில் சிறந்த தமிழ்நாடு - *Kanchipuram Edition*" என்ற நிகழ்ச்சி மூலம் முன்னெடுத்து வருகிறார்.

அந்த வகையில், காஞ்சிபுரம் சட்டமன்றத் தொகுதியில் உள்ள அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் 10 மற்றும் 12-ஆம் வகுப்பு பொதுத்தேர்வுகளில் 100 சதவீத தேர்ச்சி வழங்கிய 267 ஆசிரியர்கள் மற்றும் 10ஆம் வகுப்பு மற்றும் 12ஆம் வகுப்பு பொதுத்தேர்வுகளில் சிறப்பிடம் பெற்ற 124 மாணவ, மாணவிகள், 2024-25 மற்றும் 2025-26 கல்வியாண்டில், கலைத் திருவிழா போட்டிகளில் பங்கேற்று வெற்றிப் பெற்ற 275 மாணவச் செல்வங்கள், முதலமைச்சர் கோப்பை விளையாட்டுப் போட்டிகளில் வெற்றிப் பெற்ற 94 விளையாட்டு வீரர்கள் மற்றும் தமிழ் வளர்ச்சித்துறை நடத்திய திருக்குறள் திறனறித் தேர்வில் 1330 குறள்களை ஒப்புவித்து சாதனை படைத்த 12 மாணவர்களுக்கு "திருக்குறள் இளந்தூதர்" என்ற சிறப்பு விருது என மொத்தம் ஆசிரியர் மற்றும் மாணவச் செல்வங்கள் 772 பேருக்கு விருதுகள், சான்றிதழ் மற்றும் பரிசுகளை அமைச்சர் பெருமக்களின் திருக்கரங்களால் வழங்கப்பட உள்ளது.

இந்நிகழ்ச்சியில், விருதுபெறும் ஆசிரியர்களின் குடும்பத்தினர், மாணவ, மாணவிகளின் பெற்றோர்கள், கல்வித் துறை அதிகாரிகள், சன்பி ராண்ட் கே.ஆறுமுகம், மாநகராட்சி மேயர் மகாலட்சுமி, சி.கே.வி. தமிழ்ச்செல்வன், பி.எம்.குமார், கே. திலகர், எஸ். சந்துரு, அ.தசரதன், சு. வெங்கடேசன், பி.எம். பாபு,ஜெ. ராமகிருஷ்ணன், கே.ஏ.செங்குட்டு வன், ஏ.எஸ். முத்துச்செல்வம், வ.ஜெகன்நாதன், பி.நிர்மலா, கு. சுப்புராயன், எம்.எஸ். சுகுமார், எஸ். கே.பி. சீனிவாசன், எஸ்.சிகாமணி, ஜி. சுகுமாரன், டி. அன்பழகன், வி.எஸ். ராமகிருஷ்ணன், பி. சுந்தரவரதன், அ. யுவராஜ், மலர்கொடி குமார், ஆர்.கே. தேவேந்திரன், நித்யா சுகுமார், எஸ். ராஜலட்சுமி குஜராத், எஸ். மோகன், ஜி. சசிகலா கணேஷ், எஸ்.கே.பி. சாந்தி சீனிவாசன் உள்ளிட்ட உள்ளாட்சி பிரதிநிதி கள் மற்றும் பொதுமக்கள் திரளாகக் கலந்து கொள்கின்றனர்.

விருது பெறுவோர் விவரம்

100% தேர்ச்சி தந்த ஆசிரியர்களுக்கு அங்கீகாரம்

2025-ஆம் ஆண்டு பொதுத் தேர்வில் தங்களது பாடங்களில் 100% தேர்ச்சியை உறுதி செய்த அர்ப்பணிப்பு மிக்க 267 ஆசிரியர்கள் கௌரவிக்கப்படுகிறார்கள்.

பொதுத்தேர்வில் சிறப்பிடம் பிடித்த மாணவர்கள்

காஞ்சிபுரம் தொகுதியில் உள்ள அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் முதன்மை இடங்களைப் பிடித்த 120 மாணவச் செல்வங்களுக்குப் பாராட்டுச் சான்றிதழ், விருது மற்றும் பரிசுகள் வழங்கப்படுகின்றன.

கலைத் திருவிழா

2024-25 மற்றும் 2025-26 ஆகிய இரண்டு கல்வியாண்டுகளில் மாநில போட்டிகளுக்கு தகுதி பெற்ற அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளி மாணவர்கள் 275 பேருக்கு பாராட்டுச் சான்றிதழ், விருது மற்றும் பரிசுகள் வழங்கப்பட உள்ளன.

முதலமைச்சர் கோப்பை

முதலமைச்சர் கோப்பை விளையாட்டு போட்டிகளில் தனிநபர், குழு ஆகிய பிரிவுகளில் போட்டிகளில் மாநில போட்டிகளுக்கு தகுதி பெற்ற 110 வீரர்களுக்கு பாராட்டுச் சான்றிதழ், விருது மற்றும் பரிசுகள் வழங்கப்பட்ட உள்ளன.

திருக்குறள் போட்டி

தமிழ்நாடு அரசின் தமிழ் வளர்ச்சித் துறை சார்பில் 1330 திருக்குறள்களையும் ஒப்புவிக்கும் மாணவ மாணவிகளுக்கு தமிழ்நாடு அரசு விருது வழங்கி சிறப்பு செய்து வருகிறது. அதனடிப்படையில் காஞ்சிபுரத்தில் இப்போட்டியில் பங்கேற்று 1330 குறள்களையும் ஒப்புவித்த மாணவர்கள் 12 பேருக்கு "இளம்தூதர்" என்ற விருதுடன், சான்றிதழ் மற்றும் பரிசுகள் வழங்கப்பட உள்ளன.

மயிலை த.வேலு எம்.எல்.ஏ. பரிசுகள் வழங்குகிறார்!

சென்னை தென்மேற்கு மாவட்ட மகளிரணி சார்பில் பொங்கல் விழா!

அமைப்பாளர் பானுசலீம் அறிவிப்பு!

சென்னை,ஜன.10-

சென்னை தென்மேற்கு மாவட்டம் "திராவிட பொங்கல் விழா நிகழ்ச்சி" இன்று நடைபெறுகிறது. நிகழ்ச்சியில் மாவட்ட செயலாளர் மயிலை.த.வேலு எம்.எல்.ஏ அவர்கள் பரிசுகளை வழங்குகிறார்.

இது குறித்து மாவட்ட மகளிரணி அமைப்பாளர் பானுசலீம் அறிவிப்பு வருமாறு:-

சென்னை தென்மேற்கு மாவட்டம் மகளிர் அணி சார்பில் திராவிட பொங்கல் விழாவை முன்னிட்டு பரிசுகள் வழங்கும் விழா இன்று (10.01.2026 சனிக்கிழமை) காலை 9.00 மணியளவில் சி.பி. ராமசாமி சாலையில் உள்ள சட்டமன்ற அலுவலகத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட செயலாளர் மயிலை த.வேலு எம்.எல்.ஏ அவர்கள் பரிசுகளை வழங்குகிறார் மற்றும் பகுதிசெயலாளர்கள் ஜெ.கருணாநிதி, நந்தனம்மதி, எஸ்.முரளி, கே.எழுமலை ஆகியோர் கலந்துகொள்ளுகிறார்கள்.

இதில் மாவட்ட மகளிர் அணிதுணை அமைப்பாளர்கள், பகுதி மகளிர்அணி அமைப்பாளர் மற்றும் துணை அமைப்பாளர்கள் தவறாமல் கலந்துகொள்ளுமாறு மகளிரணி அமைப்பாளர் பானுசலீம் அன்புடன் கேட்டுக்கொள்கிறார்.

சென்னை மேற்கு மாவட்டக் கழக

அண்ணாநகர், ஆயிரம் விளக்கு தொகுதி ஆலோசனை கூட்டம்!

மாவட்ட செயலாளர் நே.சிற்றரசு அறிவிப்பு!

சென்னை மேற்கு மாவட்ட கழகம், அண்ணாநகர், ஆயிரம்விளக்கு சட்டமன்ற தொகுதி ஆலோசனை கூட்டம் இன்று (10.01.2026 - சனிக்கிழமை) மாலை 7.30 மணியளவில் நுங்கம்பாக்கம், எண்.20/32, காம்தார் நகர் முதல் தெருவில் அமைந்துள்ள மாவட்டக் கழக அலுவலகத்தில் மாவட்ட அவைத் தலைவர் து.விக்டர் தலைமையில் நடைபெறுகிறது.

இக்கூட்டத்தில் சென்னை மேற்கு மாவட்டத்திற்குட்பட்ட சட்டமன்ற உறுப்பினர்கள், தொகுதி பார்வையாளர்கள், மாவட்டக் கழக நிர்வாகிகள், பகுதி கழக செயலாளர்கள் மற்றும் வட்டக் கழக செயலாளர்கள் என அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

பொருள்: கழக ஆக்கப் பணிகள்

நே.சிற்றரசு

செயலாளர், சென்னை மேற்கு மாவட்ட தி.மு.க.

தாம்பரம் மாநகராட்சிக்கு உட்பட்ட ஐந்தாவது மண்டலத்தில் அமைந்துள்ள தாம்பரம் கிறிஸ்தவ கல்லூரியில் 1428 மாணவ மாணவிகளுக்கு லேப்டாப் (LAPTOP) மாநகர கழக செயலாளர் எஸ்.ஆர் . ராஜா எம்.எல்.ஏ. மாணவ மாணவிகளுக்கு வழங்கினார். இந்நிகழ்ச்சியில் மண்டல குழுத்தலைவர் எஸ். இந்திரன் மற்றும் மாமன்ற உறுப்பினர்கள், கல்லூரி தலைமை ஆசிரியர்கள் மற்றும் கல்லூரி மாணவ மாணவியர்களும் பங்கேற்றனர்.